# உடன்பிறப்பே... 14

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சிட்டிபாபு அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## தியாகத்தின் ரத்த சாட்சி!



ஓவியம் : ரவி பேலட்

இந்திய ஒன்றியத்தில் நெருக்கடி நிலை எனும் இருள் சூழ்ந்திருந்த காலமது. தமிழ்நாட்டில் மட்டும், அந்த இருளைக் கிழித்தெறிந்து கதிர் பாய்ச்சி நின்றது கலைஞர் எனும் சூரியன். அதற்கு வஞ்சகம் தீர்க்க நினைத்தவர்கள் தமிழ்நாடெங்கும் அவரின் உடன்பிறப்புக்களைக் கைதிகளாக்கினர்.

உடன்பிறப்புக்கள் மட்டுமல்லாது, அவரது உதிரத்தின் கரங்களுக்கும் விலங்கு தேடி வந்தது. கலைஞர் வேடமிட்டு நாடகங்களில் நடித்து, இயக்கக் கொள்கைகளைப் பரப்பி படிப்படியாக மேயர், நாடாளுமன்ற உறுப்பினர் என வளர்ந்த அந்த இளைஞனுக்குக் காத்திருந்தது ஒன்பதாம் எண் பிளாக்.

கலைஞரைப் பழி வாங்கத் துடித்த காவலர்களின் பூட்ஸ் கால்கள், கைதியாக இருந்த அன்றைய தளபதி-இன்றைய தலைவர் மீது கொலை வெறித் தாக்குதல்களை நடத்தின. அதைத் தடுத்திட, தளபதி முன் பாய்ந்து லத்தி அடிகளையும், பூட்ஸ் உதைகளையும் தன் நெஞ்சிலும் வயிற்றிலும் தாங்கி நின்றான் கழகத்தின் கொள்கைமிகு தியாக மறவன் சிட்டிபாபு.

கலைஞரின் மகன் என்பதற்காக அல்ல, எதிர்கால இயக்கத்துக்கான நம்பிக்கை என்பதற்காக தாக்குதல்களைத் தனக்காக்கி, தலைவரின் தனையனைக் காத்து நின்றான் அந்த மாவீரன்.

அண்ணாவின் தம்பிகள், உயிருக்கும் அஞ்சாதவர்கள் என நிரூபிக்கும் வகையில், ‘கட்சியை விட்டு விலகிவிடு, உனக்கு விடுதலை அளிக்கிறோம்’ என்ற காவல்துறை நெருக்கடிகளை எல்லாம் பொருட்படுத்தாமல், கழகத்துக்காக இன்னுயிரையே தந்து மெய்ப்பித்தார் சிட்டிபாபு.

### ‘மாவீரர்’ சிட்டிபாபு

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனத்தில் சொக்கலிங்கம்-லோகாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் சிட்டிபாபு. துடிப்பான சிறுவனாகப் பள்ளிப் படிப்பை மேற்கொண்டவருக்கு, வாசிப்பு ஆர்வமும், நாடக ஆர்வமும் ஒன்றுசேர அரசியலில் ஈடுபடலானார். வாகனப் பொறியியல் துறையில் டிப்ளமோ படிப்பை முடித்துவிட்டு, கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

1950-களில் இளைஞர்களிடையே கழகம் பெற்றிருந்த செல்வாக்குக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருந்த ஏ.வி.பி.ஆசைதம்பியை போலீசார் கைது செய்த நிகழ்வை நேரில் கண்ட சிட்டிபாபுவின் நெஞ்சில், கழகத்தின் மீது பற்று விதைவிடத் தொடங்கியது.

அன்று விதைவிட்ட அந்தக் கழகப் பற்று உயிரை விடத் துணியும் அளவுக்கு வேரூன்றி நின்றது. மாணவர் சிட்டிபாபுவாக கழக வாழ்க்கையைத் தொடங்கியவர் இளம்வயதிலேயே ‘மேயர்’ போன்ற உச்சங்களைத் தொட்டு, இறுதியில் ‘மாவீரர்’ சிட்டிபாபுவாக மறைந்தார்.

### இளம் மேயர்

கழகத்தின் கோட்டையான சென்னை மாநகராட்சியின் உறுப்பினராக, 1959-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, தன் மக்கள் பணியைத் தொடங்கினார் சிட்டிபாபு. அவரின் சிறந்த செயல்பாட்டால், மிகச் சிறிய வயதிலே மேயர் பொறுப்பும் அவரை வந்தடைந்தது. 1965-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மேயரானார். வணக்கத்துக்குரிய மேயராக பொறுப்பேற்ற போது அவர் 34 வயது இளைஞர்.




அண்ணா ஆசிரியராக இருந்த ‘HOME RULE’ ஆங்கில இதழுக்கும், கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடாக இருந்த ‘கழகக் குரலு’க்கும் ஆசிரியராக விளங்கி, அறிவுப் பணியாற்றினார். அவரின் தொடர் பணிகளால் தலைமை நிலைய கொள்கைப்பரப்புச் செயலாளராகவும் தலைவர் கலைஞரால் நியமிக்கப்பட்டார்.

1967-ஆம் ஆண்டில் நாம் ஆட்சியை அமைத்த போது, அந்தத் தேர்தலில் செங்கல்பட்டு மக்களவைத் தொகுதியில் நின்று வென்றார், நாடாளுமன்ற உறுப்பினராக 1967, 1971 தேர்தல்களில் செங்கல்பட்டு தொகுதியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களவையில் நடைபெறும் காரசாரமான நிகழ்ச்சிகளைப் பொதுக்கூட்டங்களின் வாயிலாக, பாமர மக்களிடையே கொண்டு சேர்த்து அரசியல்படுத்தினார்.

### கலைஞரிடம் வாழ்த்துப் பெற்று கைது!

அவசர நிலைப் பிரகடனத்தைக் காரணம் காட்டி, 1976 - ஜனவரி 31 அன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கழக ஆட்சி கலைக்கப்பட்டதை அறிந்த சிட்டிபாபு, பிப்ரவரி 1-ஆம் தேதி இரவு 1 மணிக்கு தலைவர் கலைஞரைச் சந்திக்க கோபாலபுரம் இல்லம் சென்று, அவரிடம் தான் கைதாகப் போவதைத் தெரிவித்து கைதானார். கழகம் கண்ட அத்தனைப் போராட்டங்களிலும் களம் கண்டு சிறை சென்றவரை, நிரந்தரமாகக் கொண்டு செல்ல ஒரு சிறை காத்திருந்ததை அப்போது அவர் உட்பட யாரும் அறிந்திருக்கவில்லை.

பத்திரிகைகள் நெருக்கடியைச் சந்தித்தபோது, அண்ணாவின் நினைவு நாளான பிப்ரவரி 3 அன்று, **‘அண்ணா சதுக்கத்துக்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல்’** என்று மிசாவில் கைதான கழகத்தவர் பெயர்களை ‘முரசொலி’யில் கலைஞர் வெளியிட்ட பட்டியலில் சென்னை மாவட்டத்தின் சார்பாக இடம்பெற்ற பெயர்களில் ‘மாவீரன்’ சிட்டிபாபுவின் பெயர் ஐந்தாவதாக இடம்பெற்றிருந்தது.

### சிறை டைரி!

சிறையில் அடைபட்டிருந்த காலத்தில், தானும் கழகத்தாரும் அனுபவித்த கொடுமைகளை எல்லாம் **‘ஆயுள் கைதியின் அனுபவங்கள்’** என்ற தலைப்பில் அவர் எழுதி இருந்தார். பின்னாட்களில் மிசா காலத்து காவல்துறைக் கொடூரங்களை எல்லாம் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட இஸ்மாயில் ஆணையத்தில் சிட்டிபாபு எழுதிய டைரி குறிப்பும் அளிக்கப்பட்டது.

இந்தச் சிறை டைரி, பின்னாளில் தி.மு.க. இளைஞர் அணி சார்பாக **‘சிட்டிபாபுவின் சிறை டைரி’** என்ற பெயரில் புத்தகமாக வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகத்தின் பக்கங்கள் எல்லாம் வலியையே சுமந்து நிற்கின்றன. மக்களவை உறுப்பினர் என்றுகூடப் பாராமல் கொச்சை வார்த்தைகளாலும், லத்தி அடிகளாலும் அகமும் புறமும் புண்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளை, அவர் விவரித்துள்ளார்.

### சிறையில் இறந்த ஒரே எம்.பி.

இந்தியாவெங்கும் கைது செய்யப்பட்ட மிசா கைதிகளுள் சிறையிலேயே உயிர் துறந்த ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபுதான். 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 - ஆம் தேதி அன்று சிறைக்குச் சென்ற சிட்டிபாபு, உயிரற்ற உடலாக 1977-ஆம் ஆண்டு ஜனவரி 5 - ஆம் தேதி காலை 8:50 மணிக்கு கழக உடன் பிறப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டார். 45 வயதில் ஜனநாயகம் காக்க தன் உயிரையேத் தியாகம் செய்தார் சிட்டிபாபு.

‘ஆறுதல் கூறும் அந்தச் சக்தியை நான் இழந்துவிட்டது போல் அல்லவா ஆகிவிட்டேன்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் ‘மறையாத மாணிக்கப் பரிதி’ என்ற தலைப்பில் ‘உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் அளவுக்கு சிட்டிபாபுவின் இறப்பு கலைஞரைப் பாதித்திருந்தது.

சமீபத்தில் சென்னையில் சிட்டிபாபு பெயரில் ஒரு மேம்பாலத்தைத் திறந்துவைத்து “இன்று நான் உயிரோடு நின்று பேசுவதற்கு முழுக் காரணம் சிட்டிபாபு” என்று திராவிட மாடல் முதலமைச்சர் பேசியதை கேட்கும் போது சிட்டிபாபுவின் தியாகத்தை உணரமுடியும்.

அன்று, **சிட்டிபாபு சிந்திய உதிரம் வீணாகவில்லை. இன்று உலகம் போற்றும் ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிகளுக்குப் பின்னால் கழகத்தினர் செய்திட்ட தியாகங்கள் ரத்த சாட்சிகளாக விளங்குகின்றன.**

...துடிக்கும்

## சங்கரய்யா ஆவணம்!





மக்களுக்காக உழைப்பவர்கள் காலத்தால் மறக்க முடியாத மனிதர்களாகின்றனர். அந்தவகையில், நம்மிடையே வாழ்ந்து வருபவர்தான் மூத்த பொதுவுடைமைத் தலைவர் என்.சங்கரய்யா. நாட்டு மக்களின் விடுதலைக்காகவும் உயர்வுக்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்த அவருக்கு தற்போது 102 வயது. அவரது வாழ்க்கைப் பயணத்தையும் வரலாற்றையும் பேசும் விதமாக வந்துள்ளது இந்த நூல்.

சங்கரய்யாவின் உரைகள், கட்டுரைகள், பேட்டிகளில் முக்கியமானவற்றைத் தொகுத்துள்ளார் ச.லெனின். தமிழ்மொழியின் மீதும், இலக்கியத்தின் மீதும் மாறாத பற்று கொண்ட சங்கரய்யா, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மொழி உரிமை குறித்து அழுத்தமான கருத்துகளை முன்வைத்தவர்.

மக்களுக்கான பணிகளைச் செய்ய, பொதுவாழ்க்கையில் நுழையும் இளைஞர்கள் அனைவருக்கும் சங்கரய்யா வாழ்க்கை ஒரு பாடமாகும். இந்தியாவில் இடதுசாரித் தோழர்களின் உழைப்பு, தியாகங்களை சங்கரய்யாவின் வாழ்க்கை வழி அறிந்துகொள்ளும் ஆவணம் இந்த நூல்.

## :ப்ளாஷ்பேக்




இராஜேந்திரன்-முத்துலட்சுமி

### திருமண வாழ்த்து!

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பகுதியைச் சேர்ந்த எனக்கும், கழக மாநில பொதுக் குழு முன்னாள் உறுப்பினர் முத்துலட்சுமி அவர்களுக்கும் 1993-ஆம் ஆண்டு, ஜூன் 13-ஆம் தேதி நமது கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அப்போது எங்களை ‘நூறாண்டு காலம் இணை பிரியாமல் வளமுடனும் நலமுடனும் தமிழ் போல் வாழ வேண்டும்’ என்று கூறி வாழ்த்துரை வழங்கினார். ‘பிறக்கும் குழந்தைக்குத் தமிழ்ப் பெயர் சூட்டுங்கள்’ என்று கழகத் தலைவர் கூறியதன் அடிப்படையில், எனது மகனுக்கு ‘இனியவன்’ என்று பெயர் சூட்டினோம்.



**-ப.இராஜேந்திரன், பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர், தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஐம்பெரும் முழக்கம்!

**1970 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், திருச்சியில் கழக மாநாடு நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா இல்லாமல் நடைபெற்ற முதல் மாநாடு அதுதான். மாநில மாநாடு போல மக்கள் திரண்டு வருகை தந்தனர். அந்த மாநாட்டின் இறுதியில் உரையாற்றிய கலைஞர், காலத்தால் அழியாத ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டார். ‘1. அண்ணா வழியில் அயராது உழைப்போம். 2 ஆதிக்க மற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம். 3.இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். 4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். 5.மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என முழங்கினார் கலைஞர். இன்றுவரை அதுதான் கழகத்தின் அரசியல் சாசனம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 179




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131